
# தமிழ் முரசு

TAMOUL MOUROSSOU

முரசு 2
இதழ் 9

ஆடி 1984

தமிழீழம் தவிர்க்கமுடியாதது


## எதிர்ப்புரட்சி சதிகள் எம்மீது மோத
## புரட்சிப் புயல்காற்று புதுவடிவம் பூணும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு - 33

## அரச பொய்ப் பிரச்சாரத்தை முறியடிப்போம்! அனைத்துலகின் கவனத்தையும் ஈர்ப்போம்!

தமிழ் ஈழத்தை ஆக்கிரமித்து, தமிழ் மக்கள்மீது நேரடியாகவே போர்ப்பிரகடனம் செய்து, தொடர்ச்சியாக எம்மக்களைக் கொன்று குவித்துவரும் சிறீலங்கா அரசு இன்று சர்வதேசமட்டத்திலும் எமது விடுதலைப் போராட்டத்தை 'பயங்கரவாதம்' எனக்காட்டி கொச்சைப்படுத்தும் தனது எதிர்ப்புரட்சிப் பிரச்சார நடவடிக்கைகளைப் பாரிய மட்டத்தில் முடுக்கிவிட்டுள்ளது. தனது அப்பட்டமான பொய்களைத் தொகுத்து கடந்த மே மாதத்தில் மாத்திரம் ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் 25க்கு மேற்பட்ட வேறு வேறு பிரசுரங்களை சிறீலங்காவின் தகவல் திணைக்களம் வெளியிட்டு உலக நாடுகளெங்கும் பெருமளவு பிரதிகளை விநியோகித்து, முதலாளித்துவ தொடர்புச் சாதனங்களைத் துணையாகக் கொண்டு தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் போராட்ட நடவடிக்கைகளுக்கும் கறைபூசும் சதிச்செயலில் இன்று சிறீலங்கா அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அரசின் எதிர்ப்புரட்சிப் பிரச்சார நடவடிக்கைகள் காட்டுத்தீயாகக் கட்டவிழ்த்து விடப்படும் இந்தக் கட்டத்தில் ஈழவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து நிற்கும் அனைத்து இயக்கங்களும் ஒரு விடயத்தைத் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும். சர்வதேச சமவுடமைச் சமூகத்தின் ஆதரவும், ஒத்துழைப்பும் இன்றி நாம் சோசலிசத் தமிழீழத்தை வென்றெடுப்பது என்பது மிகமிகக் கடினமானதாகும். எனவே தொடர்ச்சியான... தீவிரமான பிரச்சாரங்கள் மூலம் சர்வதேச முற்போக்குச் சக்திகளை நாம் அணுகி அவர்களது கவனத்தை எமது போராட்டத்தின்பால் ஈர்த்து ஈழவிடுதலைப் போராட்டத்திற்கான சர்வதேசிய தொடர்புகளையும், பிணைப்பையும் ஏற்படுத்த வேண்டியது வரலாற்றுக் கட்டாயமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஈழத்தில் விடுதலைப் போராளிகளின் போராட்ட நடவடிக்கைகள் எத்துணை முக்கியம் வாய்ந்தவையாக இருக்கின்றனவோ அதேயளவுக்கு இணையான முக்கியத்தை சர்வதேசரீதியாக சிறீலங்கா அரசின் பொய்ப் பிரச்சார நடவடிக்கையை முறியடித்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சர்வதேசமயப்படுத்தும் செயலும் வகிக்கின்றது. இந்தச் செயலை நிச்சயமாக தனித்த ஒரு இயக்கமோ அன்றி சில இயக்கங்களோ செய்துவிடமுடியாது என்பதை கடந்துபோன வரலாறுகள் காட்டிய காயங்கள் தெரிவிக்கும். இந்தச் செயற்பாட்டிற்கு ஈழவிடுதலை இயக்கங்களின் இணைந்த... திட்டமிட்ட பிரச்சார நடவடிக்கைகள் அவசியமாகிறது.

இந்த இடத்தில் இயக்கங்கள் தமது சுயநல சிந்தனைகளிலிருந்து தினந்தோறும் அடக்குமுறைகட்கு உள்ளாகி, வாழ்வுடன் போராடிவரும் ஈழமக்களுக்காகச் சிந்திக்க முன்வரவேண்டும். ஏனெனில் சர்வதேசரீதியான பிரச்சாரத்தில் இயக்கங்களுக்கேற்படும் சுயநலன் பேணும் சிந்தனை எமது மக்களின் போராட்டம் பற்றிய செய்திப்பரப்பலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே தான் மக்களுக்காகச் சிந்தித்து சிறீலங்கா அரசின் அப்பட்டமான பொய்களையும், அடக்குமுறைச் சட்டங்களையும், மனித உரிமை மீறல்களையும் உலக அரங்கில் அம்பலப்படுத்தி, தமிழ் மக்களின் நியாயபூர்வமான போராட்டத்திற்கான ஆதரவை சர்வதேச சோசலிச சக்திகளிடம் சம்பாதிப்பதையும், உலக விடுதலை இயக்கங்களுடன் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளுவதையும் ஓர் முக்கிய பணியாகக் கொள்ளவேண்டும்.

எனவே சக்தி வாய்ந்த முதலாளித்துவப் பிரச்சாரச் சாதனங்களையும், சிறீலங்கா அரசின் எதிர்ப்புரட்சிப் பிரச்சாரப் பொய்களையும் முறியடிப்பதில் எமது சக்திகளை ஒருங்கிணைப்போம். அதன் வழியே முழு உலகின் கவனத்தையும் ஈர்த்து தமிழ் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கான சர்வதேசத் தொடர்புகளை வென்றெடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்மலா நித்தியானந்தனின் சிறைமீட்பு

# ஆக்கிரமிப்பு அரசுக்கு அடுத்த பேரடி.



10.06.84 ஞாயிற்றுக்கிழமை இரவு 7.15க்கும் 7.30க்குமிடையில் இருவாகனங்கள் மட்டுநகர் சிறைச்சாலைக்கு முன்வந்து நின்றன. ஒருவாகனத்திலிருந்து இருந்து சிறைக்காவலர் உடையில் இறங்கிய இருவர் காவலில் இருந்த ஆறு காவலரிடமும் வாகனத்துக்குள் இருந்த சிலரைக்காட்டி இவர்களை விசாரிக்க மறியலில் வைக்கவேண்டும் கதவைத் திறவுங்கள் என்று கேட்க காவலர்கள் கதவைத் திறந்துவிடுகிறார்கள். உடனே மற்ற வாகனத்தில் வந்த ஆயுதம் தரித்த ஒரு பேர் சிறைக்குள் புகுந்து பெண்கள் சிறைக்கூடத்தின் பக்கம் செல்கின்றனர். நிர்மலா நித்தி இருந்த சிறைக்கூடக் கதவை உடைத்து அவரை மீட்டெடுத்து அங்கிருந்து தப்பிச் செல்கின்றனர். ஏறத்தாழ 30 நிமிடங்கள் வரை சிறைக்குள் இருந்த இளைஞர்களின் துப்பாக்கிகளிலிருந்து ஒரு குண்டு கூட வெடிக்கவில்லை. நிர்மலாவின் சிறைமீட்பு கச்சிதமாக முடிந்துவிட்டது.

1982 ம் ஆண்டு நவம்பர் மாதம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் விஞ்ஞானப் பட்டதாரியான நிர்மலா நித்தி அரசபடையினரின் கடுமையான சித்திரவதைகட்கு தொடர்ச்சியாக உள்ளாக்கப்பட்டார். இவரை விடுதலை செய்யும்படி சர்வதேச பெண்ணுரிமைச் சங்கங்களும், மனித உரிமைச் சபைகளும் விடுத்த வேண்டுகோள்கள் தொடர்ச்சியாக மனிதாபிமானமற்ற சிறீலங்கா அரசினால் அலட்சியப்படுத்தப்பட்டே வந்தது. ஆக்கிரமிப்பு அரசின் இந்த அக்கிரம செய்கைக்கு போராளிகள் இப்போது பதில் புகட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரக்கணக்காகப் படைகளைக் குவித்தாலென்ன அடுக்கடுக்காகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்தாலென்ன தேசிய உணர்வும், சாதுரியமான முறையில் திட்டங்களை வகுத்து செயற்படும் திறமையும் வாய்ந்த தமிழீழவிடுதலைப் போராளிகளின் செயற்பாட்டின் முன்னால் இவற்றால் நின்று பிடிக்க முடியாது என்பது மீண்டும் ஒருதரம் தமிழீழத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஈழவிடுதலைப் போராட்டத்தை முடக்கிவிட்டதாக மார்தட்டிக்கொண்டிருக்கும் சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு அரசுக்கு எமது போராளிகள் கொடுத்திருக்கும் அடுத்த பேரடி இச்சிறைமீட்பாகும். அதுமாத்திரமல்ல தமிழீழப் போராட்டத்தை யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் மாத்திரம் முடக்க முயலும் சிறீலங்கா அரசின் பொய்ப்பிரச்சாரம் மீண்டும் முறியடிக்கப்பட்டு எமது போராட்டம் வடக்கு... கிழக்கு... மலையகம் என வளர்ந்து கொண்டே செல்வது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இச்செயலைப் புரிந்த இயக்கம் தனது அதிகார பூர்வமான அறிக்கையை இன்னும் வெளியிடாமல் இருந்த போதும் நிர்மலா நித்தியின் சிறைமீட்பு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இன்னுமொரு புதிய அத்தியாயத்தைப் புரட்டியுள்ளது என்பது நிட்சயமான உண்மையாகும்.

ஆக்கிரமிப்பு அரசின் அகோராதியால் அப்பாவித் தமிழ்ப்பெண்களும் 'பயங்கரவாதிகளாம்'.



சுன்னாக இராணுவ வெறியாட்டத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட பெண்மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புரட்சி சதிகள் எம்மீது மோத
# புரட்சிப் புயல்காற்று புதுவடிவம் பூணும்

"......நமது கிராமப் புறத்தில் உள்ள பண்பாடு கூட இல்லாத 'கீழ்த்தரமான அரசுதான்' 'இந்திய அரசு' இந்தியாவுக்கு கூறுகிறேன் அடிமைப்பட மாட்டோம். முடிந்தால் ஆக்கிரமிப்புச் செய்யுங்கள். இந்த நாட்டை விழுங்க வேண்டுமானால் வெளிப்படையாக விழுங்கும்படி இந்திராகாந்திக்கு நேரடியாகக் கூறுகிறேன்........ இந்தியா எங்களை ஆக்கிரமிக்கலாம் ஆனால் எமது ஒன்றரைக் கோடி மக்களையும் கொன்றதன் பின்னரே இங்கு ஆட்சி நடத்த முடியும். நாம் யாருக்கும் உயிருடன் அடிபணிய மாட்டோம்........."

இப்படியெல்லாம் இந்தியாவுக்கு எதிராக ஆத்திரமூட்டலை மேற்கொண்டுவருவது சிறீலங்காவின் எந்த ஒரு கிராமத்தின் மூலையிலுள்ள அப்புகாமியோ அல்லது பியதாசாவோ அல்ல. ஒரு காலத்தில் தமிழர் கூட்டணியினரின் அன்புக்கு உரிய தலைவராக விளங்கியவரும், ஜெயவர்த்தன தனது அந்திம காலத்தை நெருங்கிவிட்டது கண்டு சி.ஐ.ஏ புதிதாக விலைக்கு வாங்கியிருக்கும் கைக்கூலியுமான சிறீலங்காவின் பிரதம மந்திரி ரணசிங்க பிரேமதாசாதான். இந்தியாவுக்கு எதிரான தனது தொடர்ச்சியான ஆத்திரமூட்டல் முயற்சிகளின் புதிய நாடகத்துக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் இப்போது சிறீலங்காவில் மேடை அமைத்து அதில் கதாநாயகனை பிரேமதாசாவை அரங்கேற்றியுள்ளது.

இந் நிலையில் நாம் இலங்கை இந்தியா ஆகியவற்றின் சக்திகளை சற்று நோக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா: சனத்தொகை - 684 மில்லியன்.

**இராணுவம்** - 960,000 வீரர்களைக் கொண்டது. இது தவிர 200,000 வீரர்கள் தொண்டர்படையிலும் 50,000 வீரர்கள் எல்லைப்படையிலும் உள்ளனர். அதி சக்தியும் நவீனத்தன்மையும் வாய்ந்த ஆயுதங்கள் இந்திய இராணுவத்திடம் உள்ளன.

**கடற்படை** - 47,000 வீரர்களைக் கொண்டது. அதிசக்தி வாய்ந்த நீர்மூழ்கிக் கப்பல்களையும், போர்க்கப்பல்களையும் கொண்டது. மூன்று தளங்கள் உள்ளன.

**விமானப்படை** - 113,000 விமானப்படை வீரர்களையும் 115 மிராஜ் 2000, 115 ஜகுவார், 48 மிக் 23 - மிக் 40 அஜீத் போர்விமானங்கள், 40 இஸ்க்ரா, 90 கிரான், 171 கவாக், 140 எச்.பி.ரி மற்றும் பல விமானங்களைக் கொண்டது.

## சிறிலங்கா: சனத்தொகை - 14.9 மில்லியன்.

**இராணுவம்** - 10,000 துருப்புக்களை மாத்திரம் கொண்டது. தொண்டர்படையில் மேலும் 10,000 பேர் உள்ளனர்.

**கடற்படை** - அதிகாரிகள் உட்பட 2960 பேரைக் கொண்டது. 16 பீரங்கிப்படகுகளும், 25 ரோந்துப் படகுகளும் மாத்திரம் உள்ளன. கடற்படைத் தொண்டர் பிரிவில் அதிகாரிகள் உட்பட 493பேர் உள்ளனர்.

**விமானப்படை** - அதிகாரிகள் உட்பட 2,100 பேர்களைக் கொண்டது. 3 மிக் 17 F போர்விமானங்களையும் 1 மிக் 15 UT பயிற்சி விமானத்தையும், சிறு விமானங்கள் சிலவற்றையும், ஹெலிகொப்டர்களையும் மாத்திரம் கொண்டது.

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் இராணுவம் உலகில் நான்காவது இடத்தை வகிப்பது , அதன் விமானப் படை உலகில் ஐந்தாவது இடத்தை வகிப்பது . இந்தியாவிடம் அதிசக்தி வாய்ந்த கடற்படை உள்ளது . அனைத்துக்கும் மேலாக தேசிய உணர்வு கொண்ட 684 மில்லியன் மக்கள் உள்ளனர் . இந்த நிலையில் சுண்டைக்காய் அளவில் உள்ள சிலீங்கா தொடர்ச்சியாக இந்தியாவுக்கு ஆத்திரமூட்ட மேற்பட்டுள்ள விடயத்தை நாம் சாதாரணமாக எடுத்துவிட முடியாது .

ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு இன்று சிறீலங்காவிற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் துணை தேவையாக இருக்கிறது . ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இந்தியாவைப் பலவீனப்படுத்துவது அவசியமாக இருக்கிறது . ஏனெனில் பலம் பொருந்திய இந்தியா இருக்கும் மட்டும் மீண்டும் இந்து சமுத்திரத்தில் தனது வல்லமையைக் காட்டி வணிகத்தைப் பெருக்கவோ அன்றி மீண்டும்காலனியாதிக்கத்தினை நிலை நாட்டி சுரண்டலை விஸ்த்தரிக்கவோ வாய்ப்பில்லை என்பதை அமெரிக்க ஏகாதிபத்தியம் மிகத் தெளிவாகவே உணர்ந்துள்ளது . அது மாத்திரமல்ல நாளை ஏற்படப் போகும் சோசலிசத் தமிழீழம் மொத்த உப கண்டத்திலும் ஏற்படப்போகும் சோசலிசப் புரட்சியின் திறவு கோலாகவிருக்கும் என்பதையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தெளிவாக உணர்ந்த காரணத்தினாலேயே இன்று எமது போராட்டத்தை நசுக்கும் எதிர்ப் புரட்சிகளின் தயாரிப்பாளனாக செயல்படுகிறது .

ஏகாதிபத்தியத்தின் இந்த சதிக்கு சீனா , பாகிஸ்த்தான் , ஜப்பான் , தென் கொரியா , பிரிட்டன் என்ற ஆதரவளிக்கும் நாடுகளின் பட்டியல்கள் நீண்டுகொண்டே போகின்றன . ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இன்று புரட்சியின் விதைகளைத் தூவிக் கொண்டிருக்கும் ஈழ மக்களை முற்றாகவே கொன்றழிப்பதற்கான சகல தயாரிப்புகளிலும் இந் நாடுகள் சிறீலங்கா அரசுக்குத் துணை நின்று ஒரு மிருகத்தனமான ஆட்சியைஇராணுவ ஆட்சியை......ஆக்கிரமிப்பை ஈழத்தில் மேற்கொண்டுள்ளனர். இதன் ஒரு அம்சம்தான் ஈழ மக்களை கொன்றழிக்கும் விசேடமாக வரவழைக்கப்பட்டிருக்கும் 'மொஸாட்' இஸ்ரேலிய (மிருகப்) படைகள் பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனிய மக்களை கொன்றழித்த இரத்தக் கறைகளிலிருந்து நீங்க முன்னர் அடுத்த வெறியாட்டத்திற்கு வேட்டை நாய்களாய் இன்று ஈழ வீதிகளில் இவர்கள் திரிகிறார்கள்.

இவை மாத்திரமல்ல பல கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்து தமிழ் மக்களை பயங்கரவாதிகளாகப் படம் பிடித்துக் காட்டி, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தி முதலாளித்துவப் பிரச்சார சாதனங்களைப் பயன்படுத்தி சிறீலங்கா அரசு தொடர்ச்சியான பிரச்சாரங்களையும் மேற்கொண்டு வருவதும் எதிர்ப்புரட்சித் தயாரிப்புகளின் ஒரு அம்சமே.

இந்தியாவைப் பலவீனப்படுத்தல், திருமலையை அமெரிக்கத் தளமாக்கல், ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கல் ஈழ மக்களை இராணுவ கொடுமைக்கு உட்படுத்துதல், ஈழ மக்கள் மீது திட்டமிட்ட பொருளாதார அடக்குமுறைகளை மேற்கொள்ளல், இறுதியாக் ஈழ மக்களை கொன்றழித்தல் என்றெல்லாம் ஏகாதிபத்தியத்தினதும் அதனது எடுபிடிகளதும் எதிர்ப்புரட்சிச் சதிகள் தொடர்கின்றன. இவற்றை எதிர் கொண்டு முறியடிக்க வேண்டியது இன்று ஈழ விடுதலை இயக்கங்களதும் மக்களதும் கடமையாகிறது. எப்படி எதிர்ப் புரட்சித் தயாரிப்புகளுக்கு ஏகாதிபத்தியம் திக்குத் திக்காகக் கிடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவங்களை ஒன்றிணைத்ததோ அது போல நாமும் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க, சோசலிசத் தமிழ் ஈழத்தை வென்றெடுக்க, எதிர்ப்புரட்சி சக்திகளை முறியடிக்க ஐக்கியப்படுவோம். சர்வ தேச சோசலிச சக்திகளுடன் ஒன்றிணைந்து போராடுவோம். எதிர்ப் புரட்சி சக்திகள் எம்மீது மோத புரட்சிப் புயல்காற்று புதுவடிவம் பூணும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ... தமிழக... ஸ்ரீலங்கா செய்திகள்

## ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு கூலிப்படைகளை சிறீலங்கா அரசு அழைக்கிறது.

ஈழவிடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக சிறீலங்காவின் பாசிச அரசினால் வரவழைக்கப்பட்ட இஸ்ரேலிய 'மொசாட்' படையினர் ஏற்கனவே தமிழ் ஈழத்தில் ரோந்து, மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமிழ்மக்களை கொடுமைப்படுத்தத் தொடங்கிவிட்ட இந்தவேளையிலே தமிழீழ விடுதலைப் போராளிகளை எதிர்த்துப் போராட சிறீலங்கா அரசு பிரித்தானியக் கூலிப்படைகளை சேவையில் அமர்த்தியுள்ளதை இந்திய வெளிவிவகார அமைச்சு அம்பலப்படுத்தியுள்ளதுடன் இது குறித்து பிரிட்டனின் கவனத்தையும் ஈர்த்துள்ளதாக அறிவித்துள்ளது. இக் கூலிப்படையினர் பிரிட்டனின் விசேட விமானப்படையைச் சேர்ந்த கொமாண்டோக்கள் என இவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

## கொழும்பின் பிரபல உல்லாசப் பிரயாணிகள் விடுதியில் குண்டு வெடிப்பு!

கொழும்பின் பிரபல உல்லாசப் பிரயாணிகள் விடுதியான 'ஹொட்டேல் பேராவில்' ஏற்பட்ட குண்டு வெடிப்பு ஒன்று பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவத்தில் ஒருவர் பலியாகியதுடன் இருவர் படுகாயமடைந்தும் உள்ளனர். விடுதியின் பல அறைகள் சேதமடைந்தும் உள்ளன. அந்த விடுதியில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர் இது ஈழப்போராளிகளின் தாக்குதல் நடவடிக்கையாக இருக்கும் என அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். மேற்படி விடுதியில் இஸ்ரேலிய இராணுவ நிபுணர்கள் இருவர் தங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. அதே வேளையில் அத்துலத்முதலியின் முன்னைய அலுவலகத்திலும் இதைஒத்த குண்டுவெடிப்பு காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும் ஒரு அடக்குமுறைச் சட்டம்.

சிறிலங்காவின் பாசிச அரசு பத்திரிகைகளின் குரல் வளையை நசுக்கும் அடக்குமுறைச் சட்டங்களை அடுத்தடுத்துக் கொண்டுவந்துள்ளது. முதலாவதாக செய்தித் தணிக்கை சட்டத்தின்கீழ் பயங்கரவாதம் (?), பயங்கரவாத நடவடிக்கைகள் (?), பொலிசாரின் அல்லது இராணுவத்தினரின் நடவடிக்கைகள் பற்றி செய்திகள் வெளியிடுவது தணிக்கை செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற செய்திகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இது தவிர புனைப் பெயரைப் பயன்படுத்தி கட்டுரைகள், செய்திகள் வெளியிடுவதைத் தடுக்கும் சட்டங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய செய்திகளும், அரசுக்கெதிராக கிளர்ந்தெழுந்துள்ள சிறீலங்காவின் தொழிலாளர்கள், மாணவர்கள் பற்றிய செய்திகளும் வெளி உலகை அடையமுடியாமல் செய்யவே இந்த ஏற்பாடுகளாகும்.

## அடக்குமுறை அரசின் துப்பாக்கிகள் தமிழ்மக்களுக்கு மாத்திரம் எதிரானவையல்ல...

சிறீலங்காவின் அடக்குமுறை அரசு தனது ஆட்சியதிகாரத்தை துப்பாக்கிகள் மூலம் நிலைப்படுத்திக் கொள்ளும் செயற்பாட்டை முடுக்கிவிட்டுள்ளது. நேற்றுவரை அப்பாவித் தமிழ்மக்களைக் கொன்றுகுவித்த அரசபடையினரின் துப்பாக்கிகள் இன்று சிறீலங்கா மாணவர்களைப் பலிவாங்கத் தொடங்கியுள்ளது. பேராதனை பல்கலைக்கழக வளாகத்துள் பொலிஸ் நிலையம் ஒன்றை அமைக்கும் அரசின் சதிச் செயலுக்கெதிராக மேற்படி பல்கலைக்கழக மாணவர்கள் கிளர்ந்தெழுந்தபோது அதை அடக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் வைத்தியப் பட்டதாரி மாணவன் பத்மசிறி 19.06.84இல் பலியானதுடன் பலர் படுகாயமுமடைந்தனர். இதையடுத்து கொழும்பில் மாணவர் போராட்டம் வெடித்துக் கிளம்பியதில் மேலும் ஒரு மாணவன் படைகளின் துப்பாக்கிக்கு பலியாகினான். இதையடுத்து ஆத்திரம் கொண்ட மாணவர்கள் பலர், வாகனங்களுக்கு தீமூட்டியதுடன் அரச எதிர்ப்பு சுலோகங்களுடன் எதிர்ப்பூர்வலங்களை மேற்கொண்டனர். இதையடுத்து இப்பகுதி பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிலங்காவின் இஸ்ரேலிய உறவுக்கெதிராக அரபு நாடுகள் பலத்த கண்டனம்.

சியோனிச இஸ்ரேலியர்களுடன் சிறிலங்கா அரசு ஏற்படுத்திக் கொண்ட உறவு அரபு நாடுகளின் வன்மையான கண்டனத்துக்கு உள்ளாகிவருகிறது. சவூதி அரேபியா, லிபியா, ஓமான், ஈ.ரான், ஈ.ராக் உட்பட பல அரபு நாடுகளின் தூதர்கள் உட்பட பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் பிரதிநிதியும் இது குறித்த தமது கண்டனங்களை தெரிவித்துள்ளதாக இந்திய வானொலி தெரிவித்துள்ளது. அதேவேளையில் சிறிலங்காவின் ஜனாதிபதி ஜெயவர்த்தன தம்மைச் சந்தித்த அரபு நாடுகளின் தூதர்களிடம் இது சிறிலங்காவின் உள் விவகாரம் என்றும் இதில் தலையிட வேறு எவருக்கும் உரிமையில்லை என்றும் கூறியுள்ளார்.

சியோனிஸ்ட்டுகளுக்கு நாடு பூராவும் விரிந்து கிடக்கின்ற இஸ்லாமியத் தோழர்களை அடக்க அரச துணைப் படைகளையும், அடக்குமுறைச் சட்டங்களையும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வருகிறது.

## இலங்கை வரவிருந்த பிரித்தானிய பா.உ. களுக்கு அனுமதி மறுப்பு!

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்த தொழில் கட்சி பா.உ. டேவ் நெல்லிஸ்ட், கன்சர்வேட்டிவ் கட்சி பா.உ. ஹரி கிரீன்வே ஆகிய இருவருக்கும் நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதாகக் கூறப்பட்டு விசா நிராகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி இரு உறுப்பினர்களும் பிரித்தானியப் பாராளுமன்றத்தின் மனித உரிமைக் குழுப் பிரதிநிதிகளாகும். இது குறித்துக் கருத்துத் தெரிவித்த திரு. நெல்லிஸ்ட் தமது அனுமதி நிராகரிக்கப்பட்ட இந்த நேரத்தில் இலங்கையில் இரு பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும், பல்கலைக்கழகங்கள்- கல்லூரிகள் மூடப்பட்டுள்ளதாகவும், சில அரசியல் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறீலங்கா விமானப்படையினரின் விமானம் தீக்கிரை!

ஊர்காவற்றுறைக் கடற்கரையில் தரையிறக்கப்பட்டிருந்த சிறீலங்கா விமானப்படையினரின் விமானமொன்று விடுதலைப் போராளிகளால் தீயிட்டு முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளது. இச்செயல் ஆக்கிரமிப்பு அரசுக்கு பெரும் பொருட்சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளையில் கடந்த 17.06.84 ஞாயிறு அன்று யாழ். கச்சேரிக்கு முன்னுள்ள யாழ். தேர்தல் அலுவலகமும் குண்டுவீசித் தகர்க்கப்பட்டுள்ளது. மேலும் மானிப்பாய் ஆர். அந்தோனியார் தேவாலயத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசாரிடமிருந்து 'வோக்கி டோக்கிகள்' இரண்டையும் போராளிகள் கைப்பற்றிச் சென்றுள்ளனர். அத்துடன் மண்டைதீவு வானொலி பரப்பு நிலையத்திலுள்ள சக்திவாய்ந்த ஒலிபரப்புக் கருவியினையும் ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

## 'ஈழப் போராளிகளின் நோக்கம் மார்க்சிச அரசே'... அமெரிக்காவில் ஜே. ஆர்.

ஈழவிடுதலைப் போராட்டத்தை நசுக்க தனக்கு முழு உதவிகளையும் வழங்கும்படி சிறீலங்கா ஜனாதிபதி ஏகாபத்திய றேகனை நேரில் மண்டியிட்டுக் கேட்டுக் கொண்டார். வெள்ளை மாளிகையில் உரையாற்றிய சிறீலங்கா ஜனாதிபதி ஏகாதிபத்தியத்தின் படைப்பலத்தை இந்து சமுத்திரத்தில் மேலும் அதிகரிக்கும் பொருட்டு "....தெற்கில் தமிழ்நாட்டுடன் தொடங்கி இந்தியாவிலும் இலங்கை முழுவதிலும் மார்க்சிச அரசு ஒன்றை உருவாக்குவதே பிரிவினை கோருபவர்களின் உண்மை நோக்கம் எனக் கூறியுள்ளதுடன் 'பெரிய' நாடான அமெரிக்கா இது தொடர்பாக சகல உதவிகளையும் தமக்கு அளிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். இதன் பின்னர் லண்டனில் பத்திரிகையாளரிடம் பிரிவினைவாதிகளின் போராட்டத்தை முறியடிக்க உலக நாடுகளிடம் இலங்கை உதவி கோரும் என்றும் வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் போராளிகட்கு ஆயுதம் வாங்க நிதி சேர்த்துக் கொடுப்பதற்கு இது பத்தி[illegible]யும் என்றும் கூறியுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலிச் சந்தியில் ஒரு தாக்குதல்.

கடந்த 24.06.84 ஞாயிறு மாலை யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்தியில் இ.போ.ச. வாகனம் ஒன்றின் மீது தீவிரவாத இளைஞர்கள் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஒரு பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் உட்பட ஐந்து பொலிசார் காயமடைந்தனர். இச் சம்பவத்தில் இ.போ.ச ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டார். பொலிஸ் பாதுகாப்புடன் சேமப்படை வாகனத்தில் பணம் எடுத்துச் செல்லப் பட்டபோதே இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

அதேவேளையில் 13.06.84 புதன்கிழமை யாழ். திறந்தவெளி அரங்கிற்கு அருகாமையில் பொலிஸ் ஜீப் ஒன்றை வாகனமொன்று மோதிவிட்டு வாகனச் சாரதி உடனடியாக அவ்விடத்தைவிட்டு மறைந்துவிட்டார். இச்சம்பவத்திலும் ஒரு பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் உட்பட ஐந்து பொலிசார் படுகாயமடைந்துள்ளனர்.

## மன்னாரில் பல இளைஞர்கள் கைது!

மன்னார் மாவட்டத்திலுள்ள பாலைக்குழியைச் சேர்ந்த ஜெகநாதன், நாவற்குளத்தைச் சேர்ந்த ஜெயப்பிரகாசம், காத்தான்குளத்தைச் சேர்ந்த மகேஸ்வரராஜா ஆகியோர் மார்ச் மாதம் கைது செய்யப்பட்டு தள்ளாடி இராணுவ முகாமுக்கு இழுத்துச் சென்று சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். இப்போது இவர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்பதே தெரியவில்லை. இதுபோல ஏப்ரல் மாதம் 15ம் திகதி மன்னாரில் வைத்துக் கைது செய்யப்பட்ட நாதன், பாக்கியராஜ், முருங்கனில் கைது செய்யப்பட்ட ஜாண்பீலன் ஆகிய மாணவர்கள் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இப்போது இவர்கள் எங்கே என்பதுகூடத் தெரியவில்லை. மேலும் ஏப்ரல் மாதம் 21ம் திகதி கைது செய்யப்பட்ட சீலன், செல்வன், யேசுதாசன், பெர்னாண்டோ ஆகியோர் கைது செய்யப்பட்டு கடும் இராணுவச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதில் யேசுதாசன் இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. திருமலையிலும் 20க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களுக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்தான்குடியில் இராணுவ வெறியாட்டம்.

சிறீலங்காவில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு அமைக்கப்படுவதற்கெதிராக கிளர்ந்தெழுந்த இஸ்லாமியத் தோழர்கள் காத்தான்குடியில் பெரும் எதிர்ப்பூர்வலமொன்றை மேற்கொண்ட போது சிறீலங்காவின் அரசுப் படைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து 30க்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தோழர்களைக் கொன்று குவித்ததுடன் பலரை படுகாயத்துக்கும் உள்ளாக்கியுள்ளன. யாழ் நகரிலும் இஸ்ரேலிய தொடர்புகட்கு எதிராக கதவடைப்பு, ஹர்த்தால், எதிர்ப்பு ஊர்வலம் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

## பாரிசில் தமிழீழ விடுதலைக் கண்காட்சி.

கடந்த மே மாதம் 27, 28ம் திகதிகளில் பாரிசில் தமிழ் மக்களுக்கெதிராக சிறீலங்கா அரசு மேற்கொண்டுவரும் அடக்குமுறைகளையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட நடவடிக்கைகளையும் சித்தரிக்கும் கண்காட்சியொன்று தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (பிரான்சு) வினரால் ஒழுங்கு செய்யப்பட்டது.

## பாரிசில் சிறீலங்கா அரசுக்கு எதிராக ஊர்வலம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு இஸ்ரேலியப் படைகளின் துணையை சிறீலங்கா அரசு பயன்படுத்துவதைக் கண்டித்தும் காத்தான்குடியில் இஸ்லாமியத் தோழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும் எதிராக சிறீலங்கா தூதரகத்தை நோக்கி பாரிசில் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பிரான்சுக் கிளையினரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

## லண்டனிலும் எதிர்ப்பு ஊர்வலம்.

சிறீலங்காவின் ஜனாதிபதி ஜெயவர்த்தனா லண்டனுக்கு விஜயம் செய்தபோது அங்குள்ள பெருந்தொகையான தமிழ்மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டனர். சர்வதேச தகவல் நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான வெளி[illegible]ப்பு நடவடிக்கைகள் சிறீலங்கா அரசை கலக்கமடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா குளவிக் கூட்டை இலங்கை குட்ட முயல்கிறதா?

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஆழப் புதைக்கப்பட்டிருந்த கடந்த கால வரலாறுகளை வெளிக்கு கொண்டுவந்துகொண்டிருக்கிறது. இன்றைய இளைய தலைமுறையானது எதிர்காலமென்பது கடந்த கால வரலாற்றின் தொடர்ச்சி என்பதை ஓரளவு உணர்ந்து கொண்டதால் பழைய தமிழ்த் தலைமையின் வார்த்தைகளின் அரசியல் பேச்சுக்களுக்கு மாறாக சிலபல வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர முயன்றதாலேயே தமிழர் கூட்டணியினரது சர்வ வியாபகத்தன்மையையும் அரசியல் ஏகபோகத்தையும் சவர்க்காரக் குமிழியாக்கியது. இந்நிலையில் நாம் இலங்கைத் தமிழ் மக்களது பிரச்சனையைத் தீர்க்க எடுத்த இலங்கை இந்திய அரசாங்கங்களது முயற்சிகளை வரலாற்று நிகழ்வுப் போக்கில் விளங்கிக்கொள்ளாத வரையில் தமிழீழப் போராட்டத்தை வென்றெடுக்கும் தந்திரத்தை உருவாக்கிவிடமுடியாது.

இந்த நிகழ்வுகளை நாம் 1936ம் ஆண்டின் இலங்கைத் தொழிலாளர் சங்கத்தின் போராட்டத்தில் இருந்து நோக்குவோம். இப்போராட்டத்தை அடுத்து இலங்கை அரசாங்கத்தினால் மலையகத் தோட்டத் தொழிலாளர்களது நிலைமைகளை ஆராயும்படி சேர். எட்வாட் ஜக்சன் நியமிக்கப்பட்டார். அவரது அறிக்கையில் அன்றிருந்த 5.7 மில்லியன் இலங்கையின் சனத் தொகையில் 6,59,000 பேர் தோட்டத் தொழிலாளர்கள் என்றும் 2 இலட்சம் பேர் மற்றைய இந்திய வம்சாவழியினர் என்றும் குறிப்பிடப்பட்டது. மேலும் இந்தியாவில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து குடியேறிய இம் மலையகத் தொழிலாளர்கள் இல்லாமல் இலங்கையின் பொருளாதாரம் முன்னேறமுடியாது— ஏனெனில் இலங்கைப் பிரஜைகள் எவருமே பெருந் தோட்டங்களில் வேலை செய்ய விருப்பமற்றவர்கள் என்றும், கடந்த காலத்தில் இலங்கையர்களை பெருந்தோட்டங்களில் வேலை செய்யத் தூண்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியையே தருவின என்றும் ஜக்சனின் குழு தனது அறிக்கையில்கூறியது.

இதற்கு அடுத்த வருடமான 1937ல் இலங்கையின் தேசிய சபையில் கலாநிதி என்.எம்.பெரேராஇந்தியாவிலிருந்து இலங்கைக்கு குடியேறுபவர்களை தடை செய்ய வேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டு வந்தார். இந்தப் பிரேரணையை பண்டாரநாயக்கா, சேர் பாரன் ஜெயத்திலக்கா உட்பட பல சிங்கள உறுப்பினர்களே எதிர்த்தனர். என்.எம் பெரேராவின் இப் பிரேரணையை அடுத்து தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை இந்தியக் காங்கிரசை அமைத்தனர். இந்தக் கட்டத்தில் இவர்கள் வாக்குரிமை உடையவர்களாகவே இருந்தனர்.

சிங்களத் தேசியவாதம் மெல்ல மெல்ல வளரத் தொடங்கியது. அரசியல் தெளிவு (?) பெற்ற சிங்கள அரசியல் தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் பிரித்தானியா ஏகாதிபத்தியத்தால் சுரண்டப்படுவதை விரும்பவில்லை அனல் அவர்கள் இலங்கையில் உள்ள பெருந் தோட்டங்களின் உற்பத்தித் திறன்களை அதிகரிக்கவே விரும்பினர்கள். அதற்கேற்ற வகையிலே மலையகத் தமிழர்களது வாக்குரிமை சம்பந்தமான பிரச்சனையை வளர்த்தெடுத்தார்கள். இந்த நிலையே இலங்கை இந்திய அரசாங்கங்களிடையே விரிசலை உண்டு பண்ணக் காரணமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விரிசலைப் போக்கும் முகமாக 1940ல் கொழும்பிலிருந்து டி: எஸ். சேனநாயக்கா , பண்டாரநாயக்கா, வி.சி.எஸ். கொரியா ஆகிய மூவரும் டெல்லி சென்று இலங்கையில் உள்ள இந்தியத் தமிழரின் அரசியல் அந்தஸ்த்து எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து கலந்துரையாடினார்கள். ஆனல் இக் கலந்துரையாடல் வெற்றியை அளிக்கவில்லை. ஒரு வருடத்துக்குப்பின்னர் ஓர் இந்திய தூதுக்குழு இலங்கை வந்து இலங்கை அரசுடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தியது. ஆனல் இதை இந்திய மத்திய சட்ட சபை ஏற்க மறுத்தது. 1941ல் இலங்கையில் உள்ள இந்தியப்பிரஜைகளின் உரிமைகளை வலியுறுத்தி ஓர் முடிவை பிரேரித்து உடன்படிக்கையை ஏற்படுத்தியது.

1941 டிசம்பரில் யப்பான் யுத்தத்தை பிரகடனப்படுத்தியதோடு இந்த ஒப்பந்தத்தை செயற்படுத்துவதை இரு அரசாங்கங்களும் தள்ளிப் போட்டன. யுத்தத்திற்கு கோட்டத் தொழிலாளர்களின் பங்கு தீர்க்கமானதாக இருந்தது யுத்தத்தையடுத்து பெருமளவு தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்கு திரும்பிக்கொண்டிருந்தனர். பெருமளவு தொழிலாளர்கள் இந்தியாவுக்குப் போனதால் இலங்கையின் தோட்டப் பொருளாதாரம் ஸ்தம்பிதம் அடைந்தது. இலங்கை அரசின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் தொழிலாளர்கள் இலங்கை போவதை இந்தியா அனுமதித்தது. இருந்த போதிலும் 1939ம் ஆண்டு இலங்கை அரசு கொண்டு வந்த குடியேற்றத் தடைச் சட்டம் அகற்றப்படாமலேயிருந்தது. இதன் பின்னர் பிரித்தானியாவின் அரச செயலாளரின் காலனிச் சட்டத் திருத்த ஏற்பு அறிவித்தலைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் இந்திய அரசோடு செய்த ஒப்பந்தத்தை உடைத்தெறிந்தது. இதைத் தொடர்ந்து தோட்டத் தொழிலாளர்களின் வாக்குப்பதிவானது பெருமளவில் வீழ்ச்சியடைந்து கொண்டே சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் பதவிக்கு வந்த சுதந்திர இலங்கையின் முதலாவது ஐ.தே.க. அரசு பிரஜா உரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்து இந்தியாவை ஆத்திரமூட்டியது . டொனமூர் சட்டத்தின் கீழ் வாக்குரிமை பெற்ற இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாக்குரிமையை இழந்தனர் . மலையகப் பகுதியிலிருந்து இலங்கை இந்தியக் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர்களாக சென்றவர்கள் இப்போது ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்களாகி விட்டார்கள் . 1949ம் ஆண்டு இலட்சக் கணக்கான தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறித்ததைத் தொடர்ந்து சுந்தரலிங்கம் ஐ.தே,க. மந்திரி சபையில் இருந்து இராஜினாமாச் செய்தார் . தமிழர் கூட்டணியின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான ஜி.ஜி.பொன்னம்பலம் பிரஜா உரிமைப் பறிப்பின்பங்காளரானார் . 1949.ல் இச்சட்டத்தை கொண்டு வரமுன்னர் 1948ம் ஆண்டு இலங்கைப் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவும் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவும் இரு பகுதியினரும் சம்மதிக்கும் தோரணையில் பிரஜா உரிமை வழங்குவதற்கு பேச்சுவார்த்தை நடாத்தினர். அப்போது நேரு !... இலங்கையிலிருந்து மொத்த இந்தியப் பிரஜைகளும் இந்தியா வந்தாலும் இந்தியா ஏற்கத் தயாராக இருக்கிறது என்றும் ஆனால் இது குறித்த முடிவை இலங்கையை தமது தாயகமாகக் கருதி நீண்ட காலமாக இலங்கையில் வசிக்கும் இந்தியப் பிரஜைகளே எடுக்கவேண்டும் என்றும் இலங்கைப் பிரஜா உரிமை வழங்குவதில் அவர்களுக்கு முமுன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் கூறினார். இப் பேச்சு வார்த்தையை முடித்துவிட்டு வந்த டி.எஸ். சேனநாயக்கா இதற்கு முரணாக இந்தியா-இல்ங்கை கடவுச் சீட்டு முறையை அமுல் நடத்தினார் .

இந்திய அரசு தோன்றி தொட்டு தனது பக்கத்தில் எதிர்ப்பதற்கோ நிராகரிப்பதற்கோ கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இருந்தும் விட்டுக் கொடுத்தே வந்திருக்கிறது என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. அதே வேளையில் இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா காலம் தொடக்கம் சொன்ன சொல்லைக் காப்பாற்றாமை இலங்கை அரசாங்கத்தின் வழக்கமாகிவிட்டது.

( இக்கட்டுரை அடுத்த இதழில் தொடரும்).

## இவ்வருடத்தின் அதிசிறந்த நகைச்சுவைத் துணுக்குகள் . . .

- "... என்னை சிலர் ஹிட்லருடனும், இடி அமீனுடனும் ஒப்பிடுகிறார்கள். ஆனால் நான் அவ்வாறில்லை. நான் தீங்கு விளைவிக்காத அமைதியான நல்ல மனிதன்...."

- "... மனிதர்கள் மீது மாத்திரமல்ல, விலங்குகள் மீதும் எமது அரசு இரக்கம் கொண்டுள்ளது. பட்சாதப உணர்வோடு செயற்பட்டு வருகிறது. இந்தத் தத்துவத்தை உலகெங்கும் பரப்புவதற்காகவே நான் முயல்கிறேன்...."

- "... இலங்கை ஒரு ஜனநாயக நாடு மட்டும் அல்ல. ஐந்து நட்சத்திர ஜனநாயக அமைப்புடைய ஒரு நாடுமாகும்...."

— சிறிலங்கா ஜனாதிபதி
ஜே. ஆர். ஜெயவர்த்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படித்தான் நாசமாகிறது ஈழத்தின் பொருளாதாரம்

ஒடுக்கப்படும் இனங்கள் தங்களது விடுதலைக்கான போராட்டங்களை மேற்கொண்டுவரும்போது அதிகார வர்க்கத்தினர் இப்போராட்டங்களை நசுக்குவதற்காக வேறுபட்ட அடக்கு முறைகளைக் கையாள்வது வழக்கம். அந்த வகையில் சிறிலங்காவின் ஆக்கிரமிப்பாளர்கள் தமிழ் மக்கள் மீதான தமது அடக்குமுறை நடவடிக்கைகளை தினமும் புதுப் புது வடிவத்தில் கட்டவிழ்த்து விட்டு வருகின்றனர். அரச ஆயுதப் படைகளின் அடக்குமுறை நடவடிக்கைகளால் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தை நசுக்க முயன்று தோல்வி கண்ட சிறீலங்கா அரசு இன்று தமிழ் மக்கள் மீது பொருளாதார அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு எமது போராட்டத்தை நசுக்குவதற்கான தனது முயற்சிகளுக்கு புது வடிவம் கொடுத்துள்ளது.

ஆக்கிரமிப்பு அரசின் இவ்வடக்குமுறை எப்படி தமிழீழத்தின் பொருளாதாரத்தை நாசம் செய்கிறது என்பதை சற்றுப் பார்ப்போம்.

மீன் பிடித்துறையை எடுத்துக் கொண்டால் இலங்கை முழுவதிலும் நாளொன்றுக்கு ஏறத்தாழ 1,84,722கி. கிராம் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இதில் யாழ்ப்பாணத்திலும் அதை அண்டிய பிரதேசங்களிலும் மாத்திரம் 1,06,626 கிலோ கிராம் மீன்கள் பிடிக்கப் பட்டன. இதன் பெறுமதி ஏறத்தாழ 1,34,516 ரூபாவாகும். ஆனால் ஆக்கிரமிப்பு அரசானது தனது பொருளாதார அடக்கு முறையின் ஒரு அம்சமாக வட பிராந்தியக் கடற்கரையை பாதுகாப்பு(?) வலயமாக பிரகடனப் படுத்தி ஈழத்தின் பொருளாதாரத்தை துவம்சம் செய்யத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

. விளைவு.......ஏப்பிரல் மாதத்தில் யாழ் மாவட்டத்தின் மீன் பிடி அளவு, நாளொன்றுக்கு 42,465கிலோக் கிராமாகியது. இதன் பெறுமதி ஏறத்தாழ 51,430 ரூபா மாத்திரமே. அதாவது ஆக்கிரமிப்புஅரசின் சதி உடனடியாகவே 73,076 ரூபாவை இழக்கச் செய்தது. தமிழ் மக்களின் பொருளாதார இழப்பு இத்துடன் ஓயவில்லை, அன்றாடம் கடலுக்குச் சென்று தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்த 2000 க்கும் அதிகமான மீனவர்களின் குடும்பங்கள் அடுத்த நேர உணவே கேள்விக்குறியாகி கண்ணீர்க் கடலில் தள்ளப்பட்டன. அவர்கள் வியர்வையையும் இரத்தத்தினையும் சிந்தி வாங்கிய மீன்பிடிப்படகுகள் ஏறத்தாழ 500 இவை அரச படையினரால் சிதைக்கப்பட்டன. அல்லது கைப்பற்றப்பட்டன அல்லது பயன்படுத்தமுடியாமல் முடமாக்கப்பட்டன . அது மாத்திரமல்ல அரச கடன்கள் மூலம் இப்படகுகளை வாங்கியவர்கள் தொழில்கள் முடமாக்கப்பட்டதுடன் மாத்திரம் பாதிக்கப்படாமல் கடனைக் கட்டாயம் திருப்பி கட்டவேண்டிய நெருக்குவாரத்துக்கும் உள்ளாகியுள்ளனர்.

வடபகுதி மீனவர் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டு வந்த வாகன மீன் சேகரிப்புச் சேவை முற்றாகத் துண்டிக்கப்பட்டு விட்டது. மண்டைதீவில் உள்ள கோழிப் பண்ணைகட்கான உணவு தயாரிக்கும் தொழிற்சாலைக்கு மீன்ஒரு முக்கிய தயாரிப்புப் பொருளாக இருந்து வந்தது . இன்று அரச அடக்குமுறை ஏற்படுத்திய மீன் தட்டுப்பாடு இத் தொழிற்சாலையினது உற்பத்தியை குன்றச் செய்து விட்டது. இந்தத் தொழிற்சாலை சிறீலங்காவிற்குத் தேவையான கோழி உணவில் மூன்றில் ஒரு பங்கினை விநியோகித்து வந்தது . அது மாத்திரமல்ல யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த ஐஸ் கட்டித் தொழிற்சாலையும் தனது உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவுகள் இன்று பலரை வேலை இழக்கச் செய்து பல குடும்பங்களின் அன்றாட வாழ்க்கையை கேள்விக் குறியாக்கியுள்ளது.

மீன் பிடித் துறை மாத்திரமல்ல விவசாயம் , வர்த்தகம் என்று பல துறைகளிலும் அரசாங்கம் தமிழ் மக்கள் மீது தனது பொருளாதார அடக்கு முறைகளைத் தொடர்கிறது. எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் பொருளாதார ரீதியான சிந்தனையும், தமது நாட்டின் பொருளாதாரத்தினை பாதுகாப்பதற்கான தயாரிப்புக்களும் இல்லாமல் எழுந்தமானத்தில் நடந்து விடமுடியாது. அதுவும் தமது அரசியல், பொருளாதார, சமூக விடுதலைகளை நோக்கமாகக் கொண்டு தமிழ் மக்கள் நடத்தும் விடுதலைப் போராட்டத்தில் பொருளாதாரம் வகிக்கும் பங்கு முக்கியத்துவமானது.

எனவே இந்தக் கட்டத்திலாவது ஈழ விடுதலை இயக்கங்கள் தமது சக்திகளை ஒருமுனைப்படுத்தியும், புத்திஜீவிகளை அணி திரட்டியும் ஈழ மக்களின் பொருளாதார அழிவைத் தடுக்க..... தவிர்க்க முன்வர வேண்டும்

---

தோழர்களே!

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் சிக்கலான பரிமாணத்தை அடைந்துள்ள இக்கால கட்டத்தில் விடுதலையை நோக்காகக் கொண்டு எண்ணற்ற சிரமங்களைக் கடந்து வெளிவரும் தமிழ் முரசை நெறிப்படுத்துங்கள்... தொடர்ச்சியாக ஆதரவளியுங்கள். சகல தொடர்புகட்கும்...

The Editor,
"TAMIL MURASU"
TAMIL EELAM LIBERATION COUNCIL, (France)
10 rue des Martyrs, 75009 PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழரின் இன்றைய நிலை பற்றி உலகப் பத்திரிகைகள்

நியூயோர்க் டைம்ஸ். (மே-2) THE NEW YORK TIMES

- சரியான முறையில் பயங்கரவாதிகளைக் கையாள இயலாத அல்லது விரும்பாத இலங்கை ஆயுதப்படைகள் சாதாரண குடி மக்களுக்கு எதிராக போர் தொடுத்து வருகின்றன.

- "இராணுவ பயங்கரம்" பற்றிய கதை முன்னர் எப்போதும் இலங்கையின் இதர பகுதிக்கோ, பரந்த அளவில் உலகத்துக்கோ கூறப்படவில்லை. உள்ளூர் செய்திகள் பெரும்பாலும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படுவதாலும் யாழ்ப்பாணம் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாலுமே இந்நிலை......

- பகலில் ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் இளம் வாலிபர் ஒருவர் அயலில் உள்ள கடை ஒன்றிற்கு தேங்காய் வாங்கச் சென்றார். திரும்பி வரும் வழியில் இராணுவத்தினர் அவரை நிறுத்தியது அவர் தேங்காய்களை வைத்திருந்த போதிலும் எங்கே சென்றிருந்தாய் எனக் கேட்டுவிட்டு சுட்டுக் கொன்றனர்.

- சில நிமிடங்களின் பின்னர் அடுத்த அயல் புறத்தில் வேலைக்கு சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொற்கொல்லர் ஒருவர் தோட்டா ஒன்றினால் கொல்லப்பட்டார். விரைவில் அங்கு மேலும் இரு சடலங்கள். இராணுவத்தினர் நான்கு சடலங்களையும் அருகேயுள்ள புகையிரதப்பாதை ஒன்றுக்கருகில் அடுக்கிவிட்டு அவற்றுக்கு தீயிட்டனர்.

- ஆண் பெண் சிறுவர்கள் தங்கள் மரக்கறி வகைகளை வாங்கத் தினமும் செல்லும் சந்தடி மிக்க திறந்த வெளிச்சந்தை ஒன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றில் சில தினங்களுக்கு முன்னர் விமாகப்படையினர் சென்றனர். எச்சரிக்கை எதுவுமின்றி இயந்திரத்துப்பாக்கிச் சூடுகளை கூட்டத்தினர் மீது படையினர் பொழிந்தனர் வயதான பெண்கள் உட்பட பலர் கொல்லப்பட்டனர்.

- "அரசாங்கம் எமது ஒத்துழைப்பைக் கோருகிறது ஆனல் அவர்கள் எமது சொத்துக்களை எரித்து, எமது பிள்ளைகளை கொன்று கன்னிச்சையாகச் சுடும்போது நாம் எப்படி ஒத்துழைப்பது?" என தமிழ் மக்கள் கேட்கிறார்கள்.

- தமிழ்த் தீவிரவாதிகளை எப்போதுமே சாராத யாழ்ப்பாணக்குடும்பங்கள் கூட இப்போது அப்பக்கம் சாரத் தொடங்கியது ஒரு பெறு பேறாகும்.

நியூஸ் லைன் – (மே–15)

- யாழ்ப்பாணத்தில் நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் மீது சிறிலங்காவின் அரச படைகள் நிகழ்த்திய படுகொலைகளுக்கான புதிய சாட்சியங்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன.

- கூரைகளின் மேலுள்ள தீவிரவதிகளை சுடுவதாகக் கூறிக்கொண்டு தரையில் உள்ள நிராயுதபாணிகளான முதியவர்களையும் இளைஞர்களையும் சுட்டுக் கொன்று சிறிலங்காவின் அரசபடை வெறியாட்டம் ஆடியுள்ளது.

- ஜெயவர்த்தனவின் அரசாங்கம் கிட்லரின் பிரச்சாரத் தளபதி கோயபல்சின் முறைகளை கையாளத் தொடங்கியுள்ளது.

- கடந்த மார்ச் 7ம் திகதி மன்னார் – முருங்கன் பிட்டியைச் சேர்ந்த 21 வயதுடைய நகுலேந்திரன் எனும் இளைஞன் பஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸில் பிராயணம் செய்யும்போது அரசபடையினரால் கைது செய்யப்பட்டார். கைதுக்கு காரணம் இவர் தீவிரவாத இயக்கப் பிரசுரங்களை வைத்திருந்ததாகக் கூறப்பட்டது. 13ம் திகதி இவரது உடல் கிளிநொச்சிக் காட்டில் காணப்பட்டது. காரணம் இவர் தப்பியோட முனைந்தபோது சுடப்பட்டதாக கூறப்பட்டது. இவரது உடலைப் பார்வையிட ஒரு மணித்தியால நேரம் இவரது பெற்றோருக்கு கொடுக்கப்பட்டது. உடனடியாக 14ம் திகதி படையினரால் இவரது உடல் எரிக்கப்பட்டது. இவரது உடலைப் பார்த்த தாயார் அது சிதைக்கப்பட்டிருந்ததாகவும், வெட்டிக்கிழிக்கப்பட்டிருந்ததாகவும் அந்தத் தாயார் கதறினர்.

- எனக்குக் கிடைத்த தகவல்களின் படி யாழ்.அடைக்கலமாதா கோவிலை சேதப்படுத்திய அரசபடையினர் தாக்குதல் குறித்து திருப்தியடைந்தவர்களாகவே இருந்தனர். ஏனெனில் நவீன உயர்ரகத் துப்பாக்கியை முதல்தரமாகப் பாவிக்கும் சந்தர்ப்பம் யாழ்ப்பாணத்திலேயே அவர்களுக்குக் கிட்டியது, அவர்களை சந்தோசமடையச் செய்தது! – இவ்வாறு யாழ்.அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா கூறினர்.

- அவசரகாலச் சட்டத்தை நீடித்து, அரசபயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடும் சிறீலங்கா அரசின் அடக்குமுறை யாழ்ப்பாணத்தை ஆக்கிரமாக்கப்பட்ட நிலமாக மாற்றியுள்ளது.

"மீண்டும் பிறப்பேன். தமிழ் ஈழ விடுதலைக்காகப் போரிடுவேன்..."

– சிவகுமாரன் –

நெஞ்சில் நிறுத்தி நினைவு கூருவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரான்சில் தீவிரவாத வலதுசாரிக் கட்சிக்கான ஆதரவு அதிகரிக்கிறது.

சமீபத்தில் நடைபெற்ற ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கான தேர்தலில் பிரான்சில் தீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணி (F.N) தனது ஆதரவைப் பெருக்கியுள்ளது. பிரான்சிலுள்ள வெளிநாட்டவர்கள் அனைவரும் வெளியேற்றப்படவேண்டும் என்ற இனவாதக் கொள்கையைக் கொண்ட LE PEN இன் தலைமையிலான இக்கட்சி 11.04% மான வாக்குகளைப் பெற்று மேற்படி பாராளுமன்றத்தில் 10 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. முன்னர் 22 ஆசனங்களை வைத்திருந்த ஆளும் சோசலிசக் கட்சி 20.7% வாக்குகளைப் பெற்று இம்முறை 20 ஆசனங்களையும், முன்னர் 40 ஆசனங்களைக் கொண்டிருந்த வலதுசாரிக் கட்சிகள் இம்முறை 42.8% வாக்குகளைப் பெற்று 41 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன. இந்தத் தேர்தலில் பிரான்சுக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியே பெருத்த இழப்பாளியாகக் கருதப்படுகிறது. கடந்த முறை 19 ஆசனங்களைக் கொண்டிருந்த இக்கட்சி இம்முறை 11.31% மான வாக்குகளைப் பெற்று 10 ஆசனங்களை மாத்திரம் பெற்றது. இத்தேர்தலில் பிரான்சின் அதிகாரம் பெற்ற வாக்காளர்களில் 42.31% மானவர்கள் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சோவியத் யூனியனில் பிரெஞ்சு ஜனாதிபதி.

பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரான் கடந்தமாதம் சோவியத் யூனியனுக்கான தமது விஜயத்தை மேற்கொண்டார். சோவியத் தலைவர் செர்னென்கோவுடன் முதற்தடவையாக மாநாடு ஒன்றை மேற்கொண்ட ஐரோப்பியத் தலைவரான பிரெஞ்சு ஜனாதிபதி தமது பேச்சுவார்த்தைகளின்போது உலக யுத்தத்தின்போது இணைந்து போராடிய பிரெஞ்சு - சோவியத் மக்களுக்கிடையிலான வரலாற்றுப் பிணைப்பை நினைவு கூர்ந்ததுடன் அமெரிக்கா - சோவியத்யூனியன் ஆகிய இருவல்லரசுகளும் ஆயுதப்பரிகரணக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவுக்கு ஆயுதங்கள் வழங்க அமெரிக்க ஏகாதிபத்தியம் சம்மதம்.

சோவியத் யூனியனை பலவீனப்படுத்தும் ஏகாதிபத்தியச் சதியின் ஒரு அம்சமாக சீனாவை ஆயுதபாணியாக்கி சோவியத் யூனியனை பயமுறுத்தும் செயற்பாட்டை அமெரிக்க ஏகாதிபத்தியம் மேற்கொண்டுள்ளது. இந்தவகையில் விமானங்களிலிருந்து ஏவப்படும் ஏவுகணைகள், டாங்கிகளிலிருந்து ஏவப்படும் ரொக்கெட்டுக்கள் மற்றும் நவீன யுத்த ஆயுதங்களை சீனாவுக்கு வழங்கும் ஒப்பந்தம் ஒன்று அமெரிக்காவில் சீன - அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர்களிடையே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதவிர அமெரிக்க விஜயத்தின் போது சீனப் பாதுகாப்பமைச்சர் சோங் அமெரிக்காவிலுள்ள பல இராணுவத் தளங்களையும், ஆயுதத் தயாரிப்புத் தொழிற்சாலைகளையும் பார்வையிட்டதும் குறிப்பிடத்தக்கது.

**சோவியத் யூனியன்**

## அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் 'பயங்கரவாத' மாநாட்டுக்கு சோவியத் யூனியன் கண்டனம்.

மூன்றாவது உலகநாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் விடுதலைப் போராட்டங்களை நசுக்குவதற்காக வாஷிங்டனில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் நடத்தப்படும் 'பயங்கரவாதம்' பற்றிய மாநாட்டை சோவியத் செய்தி ஸ்தாபனம் வன்மையாகக் கண்டித்துள்ளது. மேற்படி ஸ்தாபனமான 'டாஸ்' தனது வெளியீட்டில் அமெரிக்காவின் 'உலகக் கொள்கையில்' மேற்குநாடுகளைச் சம்பந்தப்படுத்துவதை நோக்கமாக இம்மாநாடு கொண்டுள்ளது என்றும், வாஷிங்டனுக்கு எதிரான கொள்கைகளைப் பின்பற்றும் நாடுகள்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்த திட்டமிடுவதை இம்மாநாடு காட்டுவதாகவும் குறிப்பிட்டதுடன் இம்மாநாட்டில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஷூல்ட்ஸ் ஆற்றிய உரை சோவியத் யூனியன் மீதும், மூன்றாவது உலகின் பலநாடுகளின் மீதும் மறைமுகத் தாக்குதல்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்ததாகவும் 'டாஸ்' குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிலாந்து

### பெரும் பொருளாதார நெருக்கடியில் பிரித்தானிய அரசாங்கம்!



THATCHER

சுரங்கத் தொழிலாளர்களின் திடமான வேலைநிறுத்தப் போராட்டத்தினால் ஏற்கனவே மூச்சுத்திணறும் மார்க்கிரட் தட்சரின் அரசாங்கத்தின் இயலாமை நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை மேலும் நசுக்கியுள்ளன. கடந்த மே மாதத்தில் மாத்திரம் 17,700 பேர் வேலையற்றவர்கள் பட்டியலில் சேர்ந்துள்ளனர். இது நாட்டின் மொத்த வேலையற்றவர்கள் தொகையை 3,028,600 ஆக்கியுள்ளது. இதுதவிர பிரித்தானியாவின் பெரிய வங்கிகள் இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்குக் கொடுத்த பெருமளவு தொகை கடன்பணத்தை மீளமுடியாத நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன. இவை அனைத்தும் தட்சரின் அரச தன்னைப் பாதுகாக்க 'பிரித்தானியாவின் பொருளாதாரம் உறுதித்தன்மையாக இருக்கிறது' என்று கூறிவந்த பொய்யை அம்பலப்படுத்தியுள்ளன. ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கான தேர்தலிலும் தட்சரின் கன்சர்வேட்டிவ் கட்சி பெரும் இழப்புக்களுக்கு உள்ளாகியுள்ளது.

## இஸ்ரேல்

### இஸ்ரேலியக் குடியேற்றங்களை அதிகரிக்கும் வேலையில் சியோனிஸ்டுகள்.

ஜெருசலத்திலும், அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் எதிர்வரும் 25 வருடங்களுக்குள் இஸ்ரேலியச் சனத்தொகையை இரட்டிப்பாக்கும் குடியேற்றங்களை நிறுவும் செயல்பாட்டை சியோனிச இஸ்ரேலிய அரச யூத நிர்வாகிகளின் துணையுடன் ஆரம்பித்துள்ளது. இவர்கள் தற்போது உள்ள சனத்தொகையான 330,000 ஐ 2010 ல் ஆண்டில் 710,000 இஸ்ரேலியர்கள் ஆக்குவோம் என்றும் அதேவேளையில் இப்பகுதியில் தற்போது உள்ள 309,000 அரபு மக்களின் சனத்தொகைப் பெருக்கத்தை எதிர்வரும் 25 வருடங்களில் 469,000 க்குள் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிக்கராகுவா

<u>நிக்கரகுவாவில் எதிர்ப்புரட்சியாளர்கள் பலர் கொல்லப்பட்டனர்.</u>

நிக்கரகுவாவின் சான்டினிஸ்டியப் புரட்சி அரசை தோற்கடிக்க சி.ஐ.ஏ யின் ஆதரவுடன் தாக்குதல் நடத்திய எதிர்ப்புரட்சியாளர்களில் 50க்கும் மேற்பட்டவர்கள் நிக்கரகுவாவின் வடபகுதி நகரான ஜிக்ராவில் நிக்கரகுவாவின் மக்கள் படையினரால் கொல்லப்பட்டனர். ஒரு புறமாக தனது இராஜாங்க அமைச்சரை 'பேச்சுவார்த்தை' எனும் போர்வையில் நிக்கரகுவாவின் புரட்சிகர அரசாங்கத்தோடு நாடகமாடவிட்டு விட்டு, மறுபுறமாக எதிர்ப்புரட்சித் தாக்குதலை மேற்கொள்ள முயன்ற அமெரிக்க ஜனாதிபத்தியத்துக்கு மக்கள்படை இத்தாக்குதலை முறியடித்து பேரடியைக் கொடுத்துள்ளது.

கொஸ்ராரிக்கா

<u>'மத்திய அமெரிக்காவின் பிரச்சனைகள் சுயமாகவே தீர்க்கப்படவேண்டும்' — கொஸ்ராரிக்காவின் ஜனாதிபதி.</u>

மத்திய அமெரிக்காவிலுள்ள அந்நியப் படைகள் யாவும் மீளப்பெறப்படவேண்டும் என்றும் இப்பகுதியிலுள்ள நாடுகள் தங்கள் பிரச்சனைகளை சுயமாகவே தீர்த்துக் கொள்ள அனுமதிக்கப்படவேண்டும் என்றும் கொஸ்ராரிக்காவின் ஜனாதிபதி லூயிஸ் அல்பேட்டோ கூறியுள்ளார். மத்திய அமெரிக்காவின் பிரச்சனைகள் சமூக வேறுபாடுகளையும், பொருளாதார வேறுபாடுகளையும் அடிப்படையாகக் கொண்டே ஆரம்பமானவை என்றும் இதற்கு இராணுவரீதியான தீர்வைக் காண முற்படுவது அறிவீனமான செயல் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். அதேவேளையில் சான்டினிஸ்டியப் புரட்சியின் துரோகியான எடன் பஸ்ரோராவை சமீபத்திய குண்டுவைப்பு ஒன்றின் அடுத்து கொஸ்ராரிக்கா உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது. எடன் பஸ்ரோராவுக்கெதிரான குண்டுவைப்புக்குப் பின்னணியிலும் சி.ஐ.ஏ வே சம்பந்தப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஷ்மீரில் இந்திய-பாகிஸ்தான் வீரர்கள் மோதல்.

காஷ்மீரில் இந்திய-பாகிஸ்தான் துருப்புக்களிடையே ஏற்பட்ட பெரும்மோதல் ஒன்றில் இருதரப்பிலும் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. சீனாவையும் பாகிஸ்தானையும் இணைப்பதற்காக சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட காரகோரம் பிரதானபாதையருகே இம்மோதல் ஏற்பட்டுள்ளது. காஷ்மீர் மாநிலத்தின் நுப்ரா பள்ளத்தாக்கிலுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பனிமலையின் ஒருபகுதியை பாகிஸ்தான் துருப்புக்கள் கைப்பற்ற முற்பட்டதாகவும் இவர்களை விரட்டியடிக்க அனுப்பப்பட்ட இந்திய பாரசூட் படைகள் தமது பணியை கச்சிதமாக நிறைவேற்றியதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## பம்பாயில் பதட்ட நிலை! பலர் கைது!

இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் கெடுக்க முயன்று பஞ்சாபில் படுதோல்வியடைந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இனவாதத்தைக் கிளறும் தனது சதி வேலைகளை மீண்டும் பம்பாயில் ஆரம்பித்துள்ளது. பம்பாயிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் மோதலை ஏற்படுத்த முயன்ற இச்சதிச் செயல்கள் அரசின் முன் நடவடிக்கையால் தடுக்கப்பட்டுள்ளன. மேற்படி இனவாதத்தைத் தூண்டி வந்த ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியான 'சிவசேனா' இயக்கத் தலைவர் தாக்கரே உட்பட 500க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டதுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டும் உள்ளது.

இதேவேளையில் பஞ்சாப்பிலிருந்து பாகிஸ்தானுக்குத் தப்பிச் செல்லும் பஞ்சாப் கிளர்ச்சியாளர்கள் பலர் தொடர்ச்சியாக இந்திய அரச படைகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப் பிரச்சனை
# ஏகாதிபத்திய சதியின் ஓர் அங்கமே!

தொடர்ச்சியாக கடந்த சில காலங்களில் இந்தியாவின் பஞ்சாப் பகுதியில் சீக்கிய தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சிகள் சமீபத்தில் இந்திய இராணுவம் சீக்கியர்களின் பொற்கோவில் மீது நிகழ்த்திய தாக்குதலுடன் ஒரு அளவு கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்துள்ளது. சிக்கலான கட்டங்களைக் கொண்ட இப்பிரச்சனையை நாம் சுருக்கமாக ஆராய்ந்துவிட முடியாது.

இருந்தபோதிலும் இன்று இந்தப் பிரச்சனையை பெரும் தீயாக மூட்டிவிட்டு அதில் குளிர்காய்வதற்காக ஏகாதிபத்தியம் துடித்து நிற்கும் உண்மையை நாம் தெளிவாக உணர்கிறோம். இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குலைக்க வேண்டும், இந்தியாவைத் துண்டாட வேண்டும் அதன் மூலம் இன்று இந்தியா பெற்றுவரும் வியத்தகு முன்னேற்றத்தை சீர்குலைக்க வேண்டும் என்ற நோக்குடன் அமெரிக்க ஏகாதிபத்தியம் சீன, பாகிஸ்தானிய அரசுகளின் துணையுடன் செயற்பட்டதை பொற்கோவிலினுள் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும், கைது செய்யப்பட்ட சீக்கிய தீவிரவாதிகளின் தகவல்களும் தெளிவாக்கின்றன. அதுபோல மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்க முற்படாமல் சதியாளரின் கைக்கூலியாய் செயற்பட்ட பிந்தரன்வாலே போன்றவர்களின் இறுதிமுடிவு இதுவாகவே இருக்கும் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இவற்றைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தினரிடையே ஏற்பட்ட குழப்பம், சில மாநிலங்களிலே ஏற்பட்ட கிளர்ச்சி அனைத்தையும் கட்டுக்குள் கொண்டுவந்து எதிர்க்கட்சிகளையும், நாட்டு மக்களினதும் ஆதரவை தனது நடவடிக்கைக்கு பெற்றுக் கொண்ட இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியதை — "... இச்சம்பவத்தை நாம் எமக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகக் கருதக்கூடாது. வருத்தப்படக் கூடிய ஒரு சம்பவமாகவே மனதில் பதிப்போம்..." — என்பதை நாம் மீண்டும் நினைவுபடுத்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி ஒன்று உருவெடுக்கிறது

காசி

சோசலிசப் புரட்சியினை வென்றெடுக்க வேண்டிய சக்தியின் அளவினை இன்று ஒரு சில இயக்கங்கள் உணரத் தொடங்கியிருக்கின்றன. இது தமிழீழ மக்களின் இருள் நிறைந்த வாழ்வில் விடிவெள்ளியைத் தோற்றுவித்திருக்கிறது.

தமிழீழ விடுதலை இயக்கங்களின் பிடிவாதமான சில நடவடிக்கைகளால் மனவெறுப்படைந்து பங்களிக்க விருப்பமற்று ஒதுங்கியிருந்து வந்தவர்கள் இன்று ஒன்றிணையும் சக்திகளின் வடிவத்தைக்காணத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஒன்றுதிரளுகின்ற அணியிலே நின்றுகொண்டிருக்கின்ற இயக்கங்களை வாழ்த்துகின்றார்கள்- வரவேற்கின்றார்கள்.

உலக ஏகாதிபத்தியத்தின் அரவணைப்பில் தன்னை வைத்துக்கொண்டிருக்கின்ற - தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை மழுங்கடிக்க தனது சகல சக்திகளையும் திரட்டிப் பயன்படுத்தி வருகின்ற- சிறிலங்கா முதலாளித்துவ அதிகார அரசுப் பொறியமைப்பைத் தகர்த்து சோசலிசத் தமிழீழத்தை அமைக்க வேண்டுமாயின் அதி சக்தி வாய்ந்த ஓர் பலமான புரட்சிகர அமைப்பொன்றை உருவாக்கியெடுக்க வேண்டியதன் கட்டாயத்தினை அனுபவ ரீதியாகப் புரிந்து கொண்டவர்கள் அத்தகைய யதார்த்தமான செயல்பாடுகளில்- புரட்சியை முன்னெடுத்துச்செல்லக்கூடிய சக்திகளை ஒருமுகப்படுத்தும் வேலைத்திட்டங்களில் தம்மை ஈடுபடுத்தியிருக்கின்றார்கள் .

சிறிலங்கா முதலாளித்துவ அரசினால் தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அளவிடமுடியாத அட்டகாசங்களை எதிர் கொள்ள- அம்மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தக் கூடிய இராணுவ அமைப்பொன்றின் அவசியத்தினை உணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தக் கூடிய இராணுவ அமைப்பொன்றின் அவசியத்தினை உணர்ந்துகொண்டவர்கள் உருப்படியான செயல்பாட்டில் இறங்கியிருப்பது ஈழப்புரட்சியின் பாதையில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுத் திருப்பமாக அமையுமென புரட்சி முன்னோக்காளர்கள் கணிப்பீடு செய்கிறார்கள்.

புரட்சிக்கான முன்னெடுப்பு வேலைத்திட்டங்கள் மக்களின் அபிலாசைகளோடு— அவர்களின் வேட்கைகளோடு பின்னிப் பிணைந்ததாக இருந்தாக வேண்டுமென்பதையும்.

எந்த ஒரு மக்கள் திரளின் மீட்புக்காக புரட்சி முன்னெடுக்கப்படுகிறதோ— அந்த மக்களின் ஒட்டுமொத்த சக்தியாலேயே புரட்சி நடவடிக்கையானது உந்துதல் செய்யப்படவேண்டும் என்பதையும் ....................

எமது இனத்தின் விடிவுக்கு போராடித்தான் தீரவேண்டும் என்பது எந்த அளவுக்கு அவசிய தேவையாக இருக்கிறதோ அந்த அளவுக்கு குறையாத அவசியத்தினை எமது மக்களின் பாதுகாப்பில் காட்டவேண்டியிருப்பதையும் ............... தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட காலந்தொட்டு இற்றைவரை நடந்துவிட்ட பல கரிய நிகழ்வுகள் வெளிப்படுத்திச் சென்றுள்ளன. வரலாற்று வெளிப்பாடுகள் உண்டாக்கிவிட்டிருக்கின்ற இந்த பாரிய திருப்பங்கள் ஈழப் புரட்சியில் ஒரு புதிய சகாப்தத்தினை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

பிரமாண்டமான சக்தியொன்று வடிவம் பெறுகின்ற இந்த காலகட்டத்தில் ஏனைய தமிழீழ விடுதலை இயக்கங்களையும் இந்த மையத்துக்குள் ஒன்று குவியச் செய்யவேண்டும்—சிதறல்களாக இருந்து வருகின்ற புரட்சி சக்திகளை ஒன்று குவிய வைப்பதன் மூலம் சிறிலங்கா அரசுக்கு முண்டு கொடுத்து வரும் சோசலிச சக்திகளின் பாரிய விரோதியான ஏகாதிபத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்துக்கு முகம் கொடுக்கக் கூடிய பிரமாண்டமான சக்தியொன்றினை உருவாக்கி விடமுடியும் — ஆகவேதான் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க அவாவுள்ள விடுதலை இயக்கங்கள் ஒவ்வொன்றும் மாத்திரமல்ல ஒவ்வொரு தமிழ் மகனும் கருவெடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த சக்தி மிக்க வடிவத்தைச் சுற்றி அணி திரள வேண்டுமென்பதையும்— இந்த வடிவம் ஓர் இறுக்கமான அமைப்பாக உருவெடுக்க நாம் உந்துசக்திகளாக இருக்கவேண்டுமென்பதையும் நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்

தமிழீழ தொழிலாள விவசாய மக்கள் அனைவரையும் ஓர் வல்லமையுள்ள அமைப்புக்குள் ஒழுங்கமைத்து போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே சிறிலங்கா முதலாளித்துவ அரசினை வலுவிழக்கச் செய்யமுடியும். இத்தகைய வேலைத்திட்டங்களை உள்ளடக்கியதான இறுக்கமான வடிவம் உருவாகின்ற காலகட்டத்திலே தமிழீழப் புரட்சியினை வென்றெடுக்கும் போராட்டமானது புயல் வேகமெடுக்கும்— இந்தப் புரட்சியிப் புயலில் சிறிலங்கா முதலாளித்துவ அதிகாரப் பொறியமைப்பானது அடித்துச்செல்லப்படுவது தவிர்க்கமுடியாத நிகழ்வாயிருக்கும்.

---

"உலகத் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்திலிருந்தும், ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலை இயக்கத்திலிருந்தும் நமது தேசத்தின் புரட்சிகர இயக்கத்தை நமது கட்சி பிரிந்து தனிமைப்படுத்தாமல் இருப்பதுதான் அனைத்து இடர்ப்பாடுகளையும் நம்மால் கடந்து வர உதவியது. மகத்தான வெற்றிகளை நோக்கி மக்களை இட்டுச் செல்ல முடிந்தது."

- தோழர் ஹோ.சி.மின்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையில் தோழர்கள் சிந்திய குருதிகள் எங்கள் இதயங்களை என்றும் நனைக்கட்டும்

ஜூலை 25-ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் சுமார் 2-30 மணி. வெலிக்கடை சிறைக்கூடத்திற்கு வெளியே ஊரடங்குச் சட்டம். உள்ளே, நூற்றுக்கணக்கான சிங்கள வெறியர்கள் தமிழ் போராளிகள் இருந்த சிறைக்கூடங்களை நோக்கிப் பயங்கர ஆயுதங்களுடன் ஆர்ப்பரித்துக் கொண்டு வந்தனர். கோடரிகள், குத்தூசிகள், வாள்கள், இரும்புக் கம்பிகள், கழிகள், கம்புகள் ஆகியன இவர்களின் கையிலிருந்த படைக்கலன்கள். இவர்களின் வரவை எதிர்பார்த்து சிறைக் கூடங்கள் சில அப்போதுதான் திறக்கப் பட்டன. சிலவற்றுக்குத் திறப்புகள் இவர்களிடம் இருந்தன. வேறு சிலவற்றை பூட்டுக்களை உடைத்துத் திறந்தார்கள். சிறைச்சாலையின் முதல் இரண்டு பிரிவுகளிலும் தமது கைங்கர்யத்தை ஒன்றன்பின் ஒன்ருகச் செய்தனர்.

விடுதலை வீரர்களின் தலைகளைக் கொத்திப் பிளந்தார்கள். குடல்களை உருவினுர்கள். குரல்வளைகளை அறுத்தார்கள். இருதயத்தைக் கிழித்தார்கள். கை, கால்கள் வெட்டித் துண்டிக்கப் பட்டன. தலை வேறு முண்டம் வேருகச் சில வீரர்கள். அக்குவேறு ஆணிவேருக உடலின் உறுப்புகள் பெயர்க்கப்பட்டன.

தமக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட நேரத்தில் பார்வையற்ற தமிழனுக்குத் தம் கண்களை வழங்கும்படியும், தமிழ்ஈழத் தாயகம் மலர்வதை அந்தக் கண்களின் மூலம் தரிசிக்க ஆசைப்படுவதாகவும் மறவன் குட்டிமணி கோர்ட்டிலே கூறிய கூற்று சிங்கள வெறியருக்குச் சீற்றத்தைத் தந்தது. குட்டிமணியைக் குற்றுயிருடன் சிறைக்கு வெளியே இழுத்து வந்து போட்டார்கள். சிங்கள வெறியரின் ஆரவாரக் கூச்சல். ''ஜயவேவா'' (வெல்க) எனக் கோஷமிட்டுக் கொண்டே குட்டிமணியின் கண்கள் இரண்டையும் கூரிய ஆயுதத்தால் தோண்டி எடுத்தனர். இவ்வாறே ஜெகனின் விழிகளும் வேறு வெறியரால் தோண்டி எடுக்கப்பட்டன. கண்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டபோது சிங்கள வெறியர் கரகோஷம் செய்தும், விசில் அடித்தும், மகிழ்ச்சி வெறியுடன் ஆரவாரித்தனர்.

குட்டிமணியின் கண்களைக் கல்லியெடுத்த வெறியனை வெற்றி வீரனுகத் தமது தோள்களில் தூக்கிச் சுமந்து விருது சூட்டினர். இதே வேளையில் ஏனைய கைதிகள் குட்டிமணியின் உடலைக் குத்திக் கிழித்து அந்த வீரனின் மர்ம உறுப்புகளையும் அறுத்து எடுத்தனர். இவ்வாறே ஜெகனின் மர்ம உறுப்புகளும் வெட்டப்பட்டன. குட்டிமணியின் குருதியைப் பத்துப் பதினைந்து பாவிகள் போட்டி போட்டுக் கொண்டு உறிஞ்சிக் குடித்தார்கள்.

தங்கதுரையின் தங்க மேனியும், தேவன், நடேசுதாசன் முதலான பலரின் தேக்குப் போன்ற தேகமும் கண்டதுண்டமாகக் கொத்தப்பட்டு கொலைக்களத்தில் வீழ்ந்தன. காவல் கைதியான சிறுவன் மயில்வாகனம் உணவுக்கூடத்தில் வெற்றிகரமாக ஒளிந்துகொண்டதாக நினைத்த சமயத்தில் ஜெயிலர் சமிதரத்ன பார்த்து விட்டான். அந்தச் சிறுவனின் தலை மயிரைப் பிடித்து இழுத்து கத்தியால் அவன் குரல்வளையை அறுத்தான். குருதி பீறிட்டுப் பாய சிறுவன் தலை சாய்ந்தான்.

கொத்திக் குதறப்பட்ட விடுதலை வீரர்களின் கதறலுக்கு மேலாக வெறியரின் காட்டுக்கூச்சல் ஓங்கி ஒலித்தது. செந்தமிழ்ச் சிங்கங்களின் உடலிலிருந்து ஊற்றெடுத்த உதிரப்புனல் செந்நீர்த் தடாகமாக சிறைக்கூடத் தளங்களிலே தேங்கி நின்றது.

இந்தக் கொலைக்களத்துக் கோர தாண்டவம் அனைத்தும் சிங்களச் சிறைக் காவலர்கள் முன்னிலையிலேயே அரங்கேறுகின்றன. அந்த அதிகாரிகள் சூழ்ந்து நின்று வேடிக்கை பார்த்தனர். வெளியே காவலுக்கு நின்ற இராணுவத்தினர் ஆரவாரம் கேட்டு அணிதிரண்டு வந்தாராயினும் ஆயுதங்கள் தோளில் தொங்க, தோழமை உணர்வுடன் கையசைத்துக் கொலைஞர்களுக்கு ஆதரவைத் தெரிவித்தனர்.

இரத்த வெறியரின் பக்தியைப் பேணுவதற்கென்றே சிறைச்சாலையில் ஒரு புத்த கோயில். முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி தினம் என்பதால் அந்தச் சிங்கள வெறியர் உண்ணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பினராய் ''புத்தம் சரணம் கச்சாமி'' என்று பயபக்தியுடன் புத்தர் சிலைக்கு முன்பு கூடி 'சில்' அனுட்டித்தார்கள். மறுநாள் திங்கட்கிழமை ரணகளம் அமைத்தார்கள்.

குட்டிமணியின் கண்களையும், நிர்மூலமான நிர்வாண உடலையும் புத்தர் சிலைக்கு முன் காணிக்கையாகப் படைத்தார்கள். பின், ஜெகன் உடலையும் தங்கதுரையின் உடலையும் அர்ப்பணித்தார்கள். இவ்வாறே மொத்தம் முப்பத்தைந்து வீரர்களின் உடல்களும் புத்தர் பெருமான் காலடியில் வீசப்பட்டன. கடைசிக் காணிக்கையாக சமிதரத்ன வீசிய சிறுவனின் சடலம்.

இளந்தமிழர்களின் சின்னாபின்னமான உடல்களைச் சிறைச்சாலை வாகனத்துள் தூக்கிப்போட்ட வேளையில் மரணத் தறுவாயின் ஈனஸ்வரம் இங்குமங்குமாகக் கேட்டது. கொலை வெறியர் அவர்களைத் தலையில் அடித்து ஐயந்திரிபறப் பிணமாக்கினார்கள். இரண்டு பிரிவுகளில் இருந்த கைதிகளின் கதையைக் கச்சிதமாக முடித்த வெறியர் மூன்றாவது பிரிவுக்கும் செல்ல முனைந்தபோது ''இன்று இவ்வளவு போதும்'' என்று சிறையதிகாரிகள் சிநேகபூர்வமாகக் கூறினராம். களமாடிக் களைத்த வெறியருக்கு அன்றிரவு போதையும், போசனமும் விசேஷ ஏற்பாடாம். சிறையில் மடிந்த போராளிகளின் பெயர்களை செவ்வாய்க்கிழமை இரவு வானொலி அறிவித்த வேளையில் அதனைக் கேட்டு அந்தக் கொலைவெறியர் ஆரவாரித்து ஆனந்தக் கூத்தாடினார்கள்.

27-ம் தேதி புதன்கிழமை மாலை நான்கு மணியளவில் குருதி வெறி பிடித்த அதே கொலைவெறியர் மேலும் பதினெட்டுப் போராளிகளை அதே ஆயுதங்களினால் பலி கொண்டனர்.

காந்திய இயக்கத் தலைவர் டாக்டர் இராஜசுந்தரம் அந்தச் சண்டாளர்களை ''சகோதரர்களே!'' எனச் சிங்களத்தில் அழைத்து ''இது தர்மமா?'' என்று கேட்டார். அதர்மம் ஆவேசம் கொண்டது. அந்தத் தர்மதூதனின் மண்டையைப் பிளந்து தரையில் சாய்த்தனர்.

தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் இன்னோரன்ன ஐம்பத்திமூன்று மறவர்கள் — போலீஸ், இராணுவ முகாம்களில் சித்திரவதைகளையும், சிறைக் கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு உயிர் வாழ்ந்ததே இந்த சம்ஹாரத்தைச் சந்திக்கத்தானா?..

அமர காவியங்களே! நீங்கள் அரங்கேறும் முன்பே அக்னிவாய்ப்பட்டதென்ன? சுக்கிலபட்சத்துச் சோதியம் புலிகளே! நீங்கள் பூரண சந்திரனாகப் பரிணமிப்பதற்கு முன்பே கிரகணிக்கப்பட்டதென்ன?

உலர்ந்து போன மலர்களே! நீங்கள் பூசைக்கு வந்த புனிதமான புஷ்பங்கள். நாளை எமக்குப் பொழுது புலர்ந்துவிடும். நீங்கள் மீண்டும் மலர்ந்து பரிமளிப்பீர்கள். தங்கத் தமிழ்ஈழத் தாயின் அங்கங்களிலே உங்களைச் சூட்டி ஆராதனை செய்வோம்.

சத்தியமாகச் சொல்கிறேன் என் சகோதரர்களே! சுதந்திரத் தமிழ் ஈழ வரலாற்றுச் சுவடிகளிலே உங்கள் இரத்தச் சுவடுகளைக் காண்பேன். அந்தக் கொடிய நிகழ்வுகள் எனக்குப் பயங்கரக் கனவுகள். என் இதயம் கவர்ந்த இளவல்களே! உங்களைப் பற்றிய இனிய நினைவுகள் என் இன்பக் கனவுகள்.

**ஜீவிமர் விடையில்**


— கரிகாலன்

துருப்பிடித்த நெஞ்ச இனத் துவேச அரசால்
கொல்லப்பட்டுப் போனவர்கள் யார் நண்பா?
வெலிக்கடைச் சிறையில் துடித்திட அரிந்தொழித்திட்டவை
விடுதலை கேட்ட உன் தோழர்கள் உடல்களே!

— தேசிங்கு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று இலத்தீன் அமெரிக்காவில் நாளை இலங்கையில்..........



US forces training in Honduras

இலத்தீன் அமெரிக்காவில் தனது சுரண்டலை விஸ்தரிப்பதற்குத் தடையாகவுள்ள புரட்சிகர அரசுகளை கவிழ்ப்பதற்கு தனது இராணுவச் சக்திகளை விஸ்தரித்து, எதிர்ப்புரட்சிச் சக்திகளுக்குப் பயிற்சி வழங்கி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்து சமுத்திரத்தில் தனக்கு எதிரான கொள்கைகள் கொண்ட நாடுகளை துண்டாட முற்பட்டு விட்டதுடன் இன்று மொத்த இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் புரட்சியை மூட்டப் போகும் ஈழவிடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கான சகல தயாரிப்புக்களையும் மேற்கொண்டு வருகிறது. இதனை முறியடித்து, இலத்தீன் அமெரிக்காவில் ஏகாதிபத்தியம் இன்று படிக்கும் பாடத்தை நாளை இலங்கையிலும் கற்பிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு

**தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org